DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **C.C.No. 58/2021**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | ரமேஷ் (சார்பு ஆய்வாளர்) (PW.26) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 22th day of June 2026

( எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது )

**முதல் விசாரணை –**

1. நான் தற்போது சிவகங்கை மாவட்டம் கல்லல் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 09.02.2013ம் தேதியன்று மாலை 4.30 மணிக்கு திருச்சுழி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது திருச்சுழி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலைப் பெற்று மருத்துவமனை சென்று சிகிச்சையில் இருந்த அருப்புக்கோட்டை ஆத்திபட்டியைச் சேர்ந்த முத்துமுனியாண்டி என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று மாலை 5.45 மணிக்கு நிலையம் வந்து மேற்படி நிலைய குற்ற எண்.288/2013 இதச பிரிவுகள் 279, 337, 338 –ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். (**முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

2. அன்றையதினம் 18.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சோலைச்சாமி, ராஜசேகர் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். (**அந்தமாதிரி வரைபடம் அசாஆ.6 ஆக குறியிடு செய்யப்படுகிறது**). மேலும் சாட்சிகள் முத்துமுனியாண்டி, திருக்கண்ணன், சண்முகதாய், மகஜர் சாட்சிகள் சோலைச்சாமி, ராஜசேகர் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3. 10.12.2013ம் தேதியன்று இவ்வழக்கில் காயம்பட்ட திருக்கண்ணன் என்பவர் சிகிச்சை பலனின்றி காலை 9.35 மணியளவில் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலைப் பெற்று ஏற்கனவே இருந்த சட்டபிரிவுகள் 279, 337, 338 இதசவிலிருந்து 279, 337, 338, 304(A) –இதசவாக பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். **(அந்த சட்டபிரிவு மாறுதல் அறிக்கை அசாஆ7 ஆக குறியீடு செய்யப்படுகிறது )** இத்துடன் எனது விசாரணை முடித்து எனது விசாரணை முடித்து மேல்விசாரணைக்கு வழக்கு கோப்புகளை ஆய்வாளர் அவர்கள் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**(எதிரி ஆஜர். எதிரி வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்யப்படாததால் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்படுகிறது).**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.